www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

SRNMK

# இரண்டாம் திருப்புத் தேர்வு - 2023

**12 - ஆம் வகுப்பு** **பொதுத்தமிழ்** பதிவு எண். | | | | |

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14X1=14**

1. 'இளந்தமிழே' என்னும் தலைப்பிலமைந்த கவிதை இடம் பெற்றுள்ள நூல் ..........................
   அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சர்ப்பயாகம் ஈ) சூரிய நிழல்
2. "வள்ளுவன் உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப்புகழ்ந்தவர் ..................
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) வ.உ.சி. ஈ) ரா.அ.பத்மநாபன்
3. உவா உறவந்துகூடும் உடுபதி, இரவி ஒத்தார் – யார் யார் ?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
4. பொய்யா வானம் புதுப்புயல் பொழிந்தென தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு
   அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல்தொடர்
   இ) இடைச்சொல்தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
5. "காவினெம்கலனே சுருக்கினெம்கலப்பை"–இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி
6. மா முன் நிரை, விளம் முன் நேர் – என்பது ..................
   அ) இயற்சீர் வெண்டளை ஆ) வெண்சீர்வெண்டளை இ) வஞ்சித்தளை ஈ) கலித்தளை
7. 'பலர்துஞ்சவும்தாம்துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப்பாடியவரும் ....................
   அ) சோழன் நெடுங்கிள்ளினை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை கோவூர்கிழார்
   இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
8. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்
   காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணிசார்ந்ததாகவே இருந்தது.
   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி
9. பொருத்துக.
   அ) முதல்கல் – 1) தோப்பில் முகமது மீரான்
   ஆ) உரிமைத்தாகம் – 2) உத்தமசோழன்
   இ) தலைக்குளம் – 3) சாந்தாதத்
   ஈ) கோடைமழை – 4) பூமணி
   அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 4, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 4, 2, 1
10. உலகச்சுற்றுச்சூழல் நாள் .................... அ) ஜீன் 5 ஆ) ஜீன் 6 இ) ஜீன் 7 ஈ) ஏப்ரல் 22
11. "வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றவர் ....................
    அ) திருஞானசம்பந்தர் ஆ) இராமலிங்கஅடிகளார் இ) அம்மூவனார் ஈ) பாரதியார்
12. 'இரட்டைக்காப்பியங்கள்' என அழைக்கப்படுபவை ..............................
    அ) சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை
    இ) சீவகசிந்தாமணி, மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம், கம்பராமாயணம்
13. தமிழ்நாட்டிலுள்ள பிராம்மிக்கல்வெட்டுகளின் ஆராய்ச்சிக்கு அடிகோலியவர் ..........................
    அ) ஐராவதம்மகாதேவன் ஆ) நீலகண்டசாஸ்திரி இ) கே.வி.சுப்பிரமணியனார்
    ஈ) மயிலை சீனி.வேங்கடசாமி
14. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது ?
    அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

## பகுதி – II (பிரிவு – 1)

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3X2=6**

15. 'எத்திசையிலும் சோறு தட்டாமல் கிட்டும்' – யார்க்கு ?
16. நெடுநல்வாடை – பெயர்க்காரணம் தருக ?
17. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது ?.
18. முகம் முகவரியற்றுப்போனதற்குச்சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2X2=4**

19. ஒலிப்பின்னல் என்றால் என்ன ?
20. வரி எழுத்தின் உறுப்புகள் யாவை ?
21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும் ? சான்று தருக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7X2=14

22. பாவிகம்– விளக்குக.
23. மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக. வனவிலங்குக் காப்பத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்
24. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. ஊண் – ஊன்
25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
 அ) என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத்தலை முறை மீது தான்.
 ஆ) அவர்கள் எல்லாபிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.
26. சொல்லைப்பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) பலகை ஆ) கோவில்
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
 அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.
28. ஏதேனும் ஒன்றனுக்குப்பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) பேசுவார் ஆ) தொழுதனர்
29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) நன்மொழி ஆ) தனியாழி
30. கலைச் சொல்லாக்கம் தருக. அ) Narrator ஆ) Debit Card

பகுதி –III ( பிரிவு – 1 )

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2X4=8

31. 'செம்பரிதிமலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப்பூக்காடாம் வானமெல்லாம்!'–இத்தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.
32. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச்சுட்டிக்காட்டுக.
33. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப்படைக்க.
34. ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின் – இடஞ்சுட்டிப்பொருள் விளக்குக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2X4=8

35. கலைமுழுமை என்றால் என்ன ? விளக்குக.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் விளக்குக.
37. சென்னை அறிவின் நகரம் – விளக்குக.
38. மயிலை சீனி. வேங்கடசாமி தொடக்ககால ஆய்வுகள் குறித்து விளக்குக

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3X4=12

39. பொருள் வேற்றுமை அணி. (அல்லது) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. வாகைத்திணையைச்சான்றுடன் விளக்குக (அல்லது)
 அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக்கூறுவன யாவை ?
41. கிழ்காணும் தொடர்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
 1. நம்மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது
 2. ஐப்பசி அடைமழையில் ஊருனிநிறைந்தது
 3. கோவலன் மதுரைக்குச் சென்றது.
 4. குதிரையும் யானையும் வேகமாக ஒடியது.
42. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

 பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
 பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
 ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
 உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ ?
 கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
 கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
 தெற்றெனநம் அகத்கண்ணைத் திறந்த விட்ட
 தெய்வக்கவி பாரதி ஓர் ஆசான் திண்ணம்
 – நாமக்கல் கவிஞர்.

43. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
 அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை (அல்லது) ஆ) யானைக்கும் அடிசறுக்கும்

பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கு விடை தருக.** 3X6=18

44. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக. (அல்லது)
 எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரிதிபலிக்கின்றன – நிறுவுக.
45. 'நெகிழிதவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
 (அல்லது) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
46. மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக (அல்லது)
 கோடை மழைகதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப்பண்புகளை விளக்குக.

பகுதி – V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

47. அ) விண்வேறு ...................... எனத் தொடங்கும் இதில் வெற்றி பெற பாடலை எழுதுக
 ஆ) சினம் என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com